## தகவல் தொழில் நுட்பக் கொள்கையை உருவாக்கி

# தமிழ்நாட்டில் ஐ.டி.புரட்சிக்கு வித்திட்டவர் கலைஞர்!

## மதுரை, வடபழஞ்சியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, ஜுலை 16-

**“தகவல் தொழில் நுட்பக் கொள்கையை உருவாக்கி தமிழ்நாட்டில் ஐ.டி. புரட்சிக்கு வித்திட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - மதுரை, வடபழஞ்சியில் பின்னக்கிள் இன்போடேக் சொலுயுசன்ஸ்’ நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்பக் கட்டிடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

அதன் விபரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.07.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வழியாக மதுரை எல்கோசெஸ்ஸில் அமைந்துள்ள பின்னக்கிள் இன்பொடெக் சொலுயுசன்ஸின் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

பின்னக்கிள் இன்பொடெக் சொலுயுசன்ஸ், உலகெங்கும் உள்ள கட்டடக்கலை, பொறியியல் மற்றும் கட்டுமான (AEC) நிறுவனங்களுக்கான கட்டடத் தகவல் உருவப்படுத்தும் (BIM) சேவைகளில் முன்னோடி நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், இதற்கு முன்பு மதுரை வடபழஞ்சியில் உள்ள எல்கோசெஸ்ஸில் உள்ள பின்னக்கிள் இன்பொடெக் சொலுயுசன்ஸ் நிறுவனத்திற்கு 34.09 ஏக்கர் நில ஒதுக்கீடு செய்துள்ளது. பின்னக்கிள் இன்பொடெக் சொலுயுசன்ஸ், நிறுவனம் முதற்கட்டமாக 1,80,000 சதுர அடி பரப்பளவில் ரூ.120 கோடி முதலீட்டில் கட்டுமானப் பணிகளை முடித்து 950 பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்துள்ளது.

இந்த அதிநவீன தகவல் தொழில்நுட்பக் கட்டடம், மதுரை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த திறமையான இளைஞர்களுக்கு 2026ஆம் ஆண்டுக்குள் சுமார் 6,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திறப்பு விழா, மதுரை மாநகரின் தொழில் நுட்ப வளர்ச்சிப் பாதையில் ஒரு முக்கியத் தருணம் எனின் அது மிகையல்ல.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.07.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சியின் வழியாக மதுரை எல்கோசெஸ்ஸில் அமைந்துள்ள பின்னக்கிள் இன்பொடெக் சொலுயுசன்ஸின் தகவல் தொழில் நுட்ப கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், மதுரையிலிருந்து தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், பின்னக்கிள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!**

முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சியின் வழியாக மதுரை, வடபழஞ்சியில் பின்னக்கிள் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசியதாவது:-

பின்னக்கிள் நிறுவனத்தின் மிகப்பெரிய Global Engineering Centre of Excellenceயை மதுரை, வடபழஞ்சியில் திறந்து வைப்பதில் பெருமையடைகிறேன்.

மதுரை சிறப்பு பொருளாதார மண்டலம், வடபழஞ்சியில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 245.17 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துள்ளது. இதில் 120 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 1,80,000 சதுர அடி பரப்பளவில் 950 பணியாளர்களுக்கு பணிவாய்ப்பினை அளித்து, உலகத்தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப மையத்தை ‘பின்னக்கிள்’ நிறுவனம் அமைத்துள்ளது. இது இந்தியாவில் அமையும் நான்காவது Global Delivery Centre ஆகும்.

**தனித்துவம் வாய்ந்த சிறப்பம்சம்!**

உலகிலேயே மிகப்பெரிய BIM எனப்படும் (Building Information Modelling) பொறியியல் மையம் ஆகும். 3டி மாடலிங், கட்டட மேலாண்மை, MEP டிசைன், Value Engineering, Scan to BIM உள்ளிட்ட பல சேவைகளை அளிப்பதாக இது அமைந்துள்ளது. இத்தகைய தனித்துவம் வாய்ந்த சிறப்பம்சங்களைக் கொண்ட இந்த ‘பின்னக்கிள்’ நிறுவனத்தின் மையம் மூலமாக 6,000 பேருக்கு, குறிப்பாக தென்மாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருப்பது எனக்கு மேலும் மகிழ்ச்சி அளிக்கிறது.

நமது திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின், பொருளாதாரத்தை வளர்க்கவும், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவும், தொழில்துறையில் அதிக அக்கறையும், கவனமும் செலுத்தி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நம்முடைய இலக்கு என்பது தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியைப் பெருக்கி, அனைத்து மாவட்டங்களும், அனைத்து வளர்ச்சியையும் அடைந்தது என்ற நிலையை எட்டுவது தான். எங்களுடைய இந்த இலக்கை அடைய உதவிடும் வகையில் ‘பின்னக்கிள்’ போன்ற நிறுவனங்கள் இன்னும் பிற தென் மாவட்டங்களில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக இந்தத் தருணத்தில் வைக்கிறேன்.

**ஐ.டி. என்றாலே கலைஞர்தான்!**

ஐ.டி. என்றாலே கலைஞர்தான். அந்த அளவுக்கு தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றிக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தியாவிலேயே முதன் முதலாக 1997ஆம் ஆண்டே தகவல் தொழில் நுட்பக் கொள்கையை உருவாக்கி, தமிழ்நாட்டில் ஐ.டி. புரட்சிக்கு வித்திட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சென்னையில் ‘டைடல்’ பூங்காவை அமைத்து இன்று ‘ராஜீவ் காந்தி சாலை’ என அழைக்கப்படும் OMR சாலையை தகவல் தொழில்நுட்பத் தாழ்வாரமாக வழிவகுத்தார். எதிர்காலம் என்பது டிஜிட்டல் காலம் என்பதை முன்கூட்டியே உணர்ந்து, தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள் கணினி பயில்வதை ஊக்குவித்தார். அவர்கள் மென்பொருள் துறையில் சிறந்து விளங்குவதற்குக் காரணமானார்.

**வீதிதோறும் பொறியியல் பட்டதாரிகள்!**

இன்று தமிழ்நாட்டில் வீதிதோறும் பொறியியல் பட்டதாரிகள் இருக்கிறார்கள் என்றால் அதற்கு அடித்தளமிட்டவர் நவீன தமிழ்நாட்டின் சிற்பியான கலைஞர் அவர்கள்தான். அத்தகைய தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் மதுரையில் அமையும் இந்த ‘பின்னக்கிள் நிறுவன மையம்’ தென் தமிழ்நாட்டில் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

இதுபோன்ற வளர்ச்சியை விரைவுபடுத்தி அதன் பயனை எல்லாருக்கும் கொண்டு சேர்ப்பதை நமது தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் மெய்ப்பித்துக் காட்டுவார் என நான் நம்புகிறேன்.

இந்த சிறப்பான முன்னெடுப்பை நிகழ்த்திக் காட்டியிருக்கும் இந்த ‘பின்னக்கிள்’ நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், ஊழியர்கள் என அனைவருக்கும் வாழ்த்துகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைச் செயலாளர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு மின்னனு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், ‘பின்னக்கிள்’ நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# கலைஞர் நூற்றாண்டு நூலகம்:

## முதல்வர் திறந்து வைத்தார்..

முதல் பக்கத் தொடர்ச்சி

பள்ளிக்கல்வித் துறையின் பொது நூலகப் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக அப்புத்தகங்களை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் வழங்கினார்.

இவ்விழாவில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா, உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ட்விட்டர் பதிவு!**

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 121ஆவது பிறந்தநாளான இன்று, நங்கநல்லூர் நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கல்வி வளர்ச்சி நாள் விழாவில் பங்கேற்று, அவரது புகழைப் போற்றினேன்.**

**அறிவியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவராக 2017இல் பொறுப்பேற்றது முதல், என்னைச் சந்திக்க வருபவர்கள் பூங்கொத்துகளையும் பொன்னாடைகளையும் தவிர்த்து, புத்தகங்களை அளித்திடச் சொல்லியிருந்தேன். அதன்படி என்னை வந்தடைந்த புத்தகங்களில் ஒன்றரை இலட்சம் புத்தகங்களை தமிழ்நாட்டின் பல்வேறு நூலகங்களுக்கும், என்னிடம் புத்தகங்கள் வேண்டி கடிதம் எழுதியவர்களுக்கும் அளித்துள்ளேன்.**

**அதன் தொடர்ச்சியாக, பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளில், முத்தமிழறிஞர் கலைஞர் அறிவித்த கல்வி வளர்ச்சி நாளில் 7740 புத்தகங்களைப் பொது நூலகத்துறைக்கு வழங்கினேன்.**

**பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் கலைஞர் நூற்றாண்டு நூலகத் திறப்பு நாள் என இந்நாளில், ‘வீட்டிற்கோர் புத்தகச்சாலை’ என்று பேரறிஞர் அண்ணா சொன்னது மெய்ப்பட உழைப்போம்!**

இவ்வாறு - சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாள் - கல்வி வளர்ச்சி நாளான நேற்று, மதுரையம்பதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை’த் திறந்து வைத்து - அதனை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்து விழாப் பேருரையாற்றி, கர்மவீரர் காமராசரின் பிறந்த நாளுக்குப் பெருமைச் சேர்ந்தார்கள் எனின் அது மிகையல்ல!



ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவை, டேராடூனில், தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்து – முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி – மக்கள் நல்வாழ்வுத்துறை தொடர்பான 14 மிக முக்கியமான கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கி உரையாடினார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி உடன் உள்ளார்.

---

## தக்காளி, வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் கடும் விலை உயர்வுக்கு

# ஒன்றிய அரசே காரணம் என்பதை மக்களிடம் எடுத்து விளக்கிடுவீர்!

### மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணியினருக்கு - அணியின் செயலாளர்கள் ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ராணி வேண்டுகோள்!

சென்னை, ஜுலை 16-

“தக்காளி, வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் கடும் விலை உயர்வுக்கு ஒன்றிய அரசே காரணம் என்பதை மக்களிடம் எடுத்து விளக்கி பிரச்சாரம் செய்திடுவீர்!” என, கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணியினருக்கு, கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

தக்காளி, வெங்காயம் விலை உயர்வானது நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளது. விலை உயரப் போகிறது என்பதை முன்பே கணித்து செயல்பட்டிருக்க வேண்டிய ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதததன் விளைவே இந்த விலை உயர்வு ஆகும்.


முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதோடு முடிந்தவரை விலை உயர்வை தடுக்கும் முயற்சிகளை எடுத்து வருகிறார். ஆனபோதிலும் விலை உயர்வுக்கு மாநில அரசுதான் காரணம் என எதிர்க்கட்சிகள் பொய் செய்தியை பரப்ப முயற்சிக்கின்றன.

தக்காளி உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வுக்கு ஒன்றிய அரசுதான் காரணம் என்ற செய்தியை நாம் மக்களிடம் பரப்ப வேண்டும்.

திங்கள்கிழமை (17 ஜுலை 2023) அன்று மாநிலம் முழுவதும் கழகத்தின் சார்பில் பிரதமர் மோடியின் படத்துக்கு தக்காளி, வெங்காய மாலை அணிவித்து ஊர்வலம் செல்லலாம். குறிப்பாக மகளிர் அணி, மகளிர் தொண்டரணியினர் இப்போராட்டத்தை மாநிலம் முழுவதும் முன்னெடுக்க வேண்டும்.

அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த தகவல் தொழில்நுட்ப அணியினர் மூலம் சமூக ஊடகங்களிலும் இச்செய்தியை பரப்ப வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. எனவே அன்பு சகோதரிகள் அவரவர் மாவட்ட செயலாளர் மற்றும் நிர்வாகிகளை தொடர்பு கொண்டு போராட்டத்தை சிறப்பாக நடத்திட கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாநில மகளிரணி செயலாளர் ஜெ. ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.




## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வரும் செய்தி!

